| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **317/2008** |
| தேதி | : | **02.02.2026.** |
| பெயர் | : | **சரோஜா க/பெ முருகேசன்.** |

**வா.த.சா.1 (PW1) திருமதி. சரோஜா க/பெ முருகேசன். என்பவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. (சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது. )**

**<u>வா.த.சா.1. (PW1) – குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாவாசொத்தில் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் புல எண் மற்றும் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது தந்தைக்கு சொந்தமானது. தாவா சொத்து எனது தந்தையின் பெயரில் உள்ளது. என் தந்தை தான் தாவா சொத்தை வாங்கினார் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தை மரணிக்கும்வரை தாவா சொத்து அவரின் பெயரில் தான் இருந்தது.

2) எனத தந்தை எனது தாயாரின் பெயரில் தாவா சொத்து சம்பந்தமாக உயில் எழுதிவைத்திருந்தார். அந்த உயில் ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது தாய் தந்தையருக்கு நான் மற்றம் என் உடன் இருவர் உடன் பிறந்தவர்கள். நடராஜன் மற்றும் மாணிக்கம் என் உடன் பிறந்த சகோதரர் ஆவார்கள். நடராஜன் என்பவர் என்னை விட 10 வயது மூத்தவர் ஆவார். தந்தை உயிருடன் இருக்கும்போது எனது சகோதரர்கள் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தார்கள்.

3) எனக்கு மதுரை என்பவருடன் முதல் திருமணம் நடைபெற்றது. அவர் திருமணம் ஆகி 2 ஆண்டுகள் கழித்து இறந்துவிட்டார். அதன் பின்னர் 2வது திருமணம் முருகேசன் என்பவருடன் நடைபெற்றது. முதல் திருமணம் எனது தந்தையின் தலைமையில் தான் நடைபெற்றது. எனது 2வது திருமணம் நடைபெறும் போது எனது தந்தை உயிருடன் தான் இருந்தார். அத்திருமணத்திற்கான செலவை எனது சகோதரர்கள் தான் செலவு செய்தார்களா என்றால் இல்லை எனது தந்தையின் தலைமையில் தான் நடந்தது.

4) எனது 2வது கணவர் முருகேசன் விவசயாம் செய்துவந்தார். அவர் தினக்கூலி மற்றும் சில இடங்களை குத்தகைக்கு எடுத்து விவசயாம் செய்துவந்தார். தாவா சொத்து எனது தந்தை இறந்த பின்னர் எனது சகோரர்கள் மட்டும் தான் விவசாயம் செய்துவந்தார்கள். தாவா சொத்தை எனது தந்தை மற்றும் எனது சகோரர் மூவரம் சேர்ந்து நடேசமுதலியார் என்பவரிடம் அடமானம் வைத்திருந்த விவரம் எனக்கு தெரியாது.

5) எனது அண்ணன் நடராஜனுக்கு திருமணம் நடைபெறவில்லை. எனது அண்ணன் நடராஜனுக்கு பத்மாவதி என்பவருடன் திருமணம் நடைபெற்று அத்திருமணத்தின் வாயிலாக பவானி என்பவர் பிறந்தார் என்றால் சரியல்ல. அந்த பவானி எனது தம்பி மாணிக்கத்தின் மகள் ஆவார். இவ்வழக்கில் எனது சகோதரர் மாணிக்கம் மற்றம் தாவா சொத்தை கிரையம் பெற்ற சுப்பிரமணியம் என்பரும் பதில் உரையை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. அந்த பதில் உரையில் மேல் கூறிய பவானி என்பவர் நடராஜன் என்பவரின் மகள் தான் தாக்கல் செய்திருந்தார்கள் அதை மறுத்து இந்நீதிமன்றத்தில் எவ்வித பதில் உரையும் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த சங்கதிகள் உண்மை என்றால் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

6) முருகப்பிள்ளை என்பவர் கோவூர் என்ற ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். முருகப்பிள்ளை என்பவர் விவசாயம் செய்து வந்தார். அவர் கடன் கொடுக்கல் வாங்கல் தொழிலை செய்யவில்லை. மாணிக்கம் என்பவருக்கு எனது திருமணத்திற்கு முன்பே அவர் திருமணம் செய்து கொண்டார். மாணிக்கத்தின் மனைவியின் பெயர் சுலோச்சனா ஆகும். மாணிக்கம் மற்றம் சுலோச்சனா தம்பதியருக்கு பவானி மற்றும் நித்யா வாரிசுகள் ஆகும். திருணம் நடைபெற்ற பின்னர் நான் தனியாக குடித்தனம் நடத்திவந்தேன். எனது சகோதரர்கள் அவர் அவர் குடும்பத்தோடு தனியாக குடும்பம் நடத்திவந்தார்கள். மாணிக்கம் என்பவர் அவரது செலவிற்காக என்னிடம் கடன் கேட்டிருந்தார். அதன் படி நான் அவருக்கு ரூபாய் 3000 வழங்கியிருந்தேன். எப்போது வழங்கினேன் என்று நினைவு இல்லை.

7) எனது தம்பி மேற்கூறிய கடனிற்காக எவ்வித Ondemand பத்திரம் எழுதி தரவில்லை. என் தம்பி என்னிடம் கடனும் கேட்கவில்லை, நான் அவருக்கு பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்லை. அப்பா இறந்த பின்னர் எனக்கும் எனது சகோரர்களுக்கும் நல்ல உறவு முறைதான் இருந்தது. நாங்கள் மூவரும் ஒரே ஊரில் தான் வசித்துவருகிறோம். நடராஜன் இறந்தபின்னர் நடராஜனின் வாரிசுகள் மற்றும் மாணிக்கம் ஆகியோர் தாவா சொத்தை சுப்பிரமணி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தனர். அந்த விவரம் எனக்கு தெரிந்த பின்னர் நான் வழக்கறிஞரை அனுகினேன்.

8) நான் மேலே கூறியுள்ள கிரயத்தை ரத்து செய்வது சம்பந்தமாக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளின் கைகளுக்கு கிடைக்கப்பெறவில்லை அதனால் அதில் உள்ள சங்கதிகள் பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல.

9) தாவா சொத்தை வாங்கிய சுப்பிரமணி , சரவணனுக்கு கிரயம் செய்து

கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபற்றிய விவரம் எனக்கு தெரியும், அந்த விற்பனை செல்லாது என்று பரிகாரம் நான் கோரவில்லை ஆகவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு நடந்த 2 வது திருமணம் எனது சகோதரர்கள் தான் செலவு செய்து நடத்திவைத்தார்கள் என்றாலும், அந்த சமயமே தாவா சொத்தில் உள்ள உரிமையை வாய் மொழியாக நான் அவர்களுக்கு விடுதலை செய்துகொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

10) இவ்வழக்கில் நடராஜனின் வாரிசுகள் சேர்க்கப்படாத காரணத்தினால் தள்ளுபடி செய்யவேணடும் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் உரிமையை ஏற்கனவே விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றாலும் அதனால் இவ்வழக்கில் பரிகாரம் கோரி எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கூறிய காரணங்களுக்காக இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கையொப்பம் : Sd/. சரோஜா**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.